1241

1241

287

215339

ARYA DHARMAM

TAMIL WEEKLY.

REGD. No. M. 2913

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.

[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணு

மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 21
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 கும்பகோணம் விக்கிரம-ஞு ஆனி-மீ 14உ 1940-ஞு ஜுன்மீ 27உ ல-26

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 28 JUN 1940

C. S. DIKSHITAR & Co.,

BOOK-SELLERS, KUMBAKONAM.

Opinion of His Holiness Sri Kanchi Kamakoti Peetathipathi Sri Sankaracharya Swamigal on Kathakusumamanjari and Vikramarka charitram etc.

॥ श्रीः ॥

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकरभगवत्पाद प्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः
क्रियते नारायणस्मृतिः ॥

पण्डितवरेण श्रीवेङ्कटरामशास्त्रिणा विरचितानि कुम्भघोणस्थेन श्रीमता सि. एस्. दीक्षितन प्रकाशितानि च कथाकुसुममञ्जरी - विक्रमार्कचरित्र प्रभृतीनि देवभाषामयानि पुस्तकानि सादरमवलोकितानि । ललितमधुरया शैल्या निबद्धानीमानि हितोपदेशपराभिः पुराणकथाभिः समावर्जयन्ति संस्कृतं पिपठिषूणां चेतः । इमान्यासेसतुहिमाचलं भारतवर्षे बहुत्र पाठ्यपुस्तकत्वेन स्वीकृतानि दृश्यन्ते। एतान्यास्तिकमीनां संस्कृतपरिशीलनेच्छूना मत्यन्तमुपयुक्तानाति दृढमभिप्रेमः ।
एतै निंबन्धैः सर्वेषां श्रेयःप्राप्तिः भूयादित्याशास्महे॥

मुकाम् कुम्भघोणम्
श्रीशा. श. १८६१ प्रमाथिसं
कार्तिकशु. २ भानुवासरे.
} नारायणस्मृतिः

A. SANKARAN M A., PH.D.
Superintendent of Sanskrit Schools.

MYLAPORE,
Madras.
12th Sept 1939.

I have perused the works of Pandit S. Venkatarama Sastri, published by C. S. Dikshitar & Co., Kumbakonam. The subjects are judiciously chosen from the Puranas and Itihasas and the books are properly graded to suit the different classes of the High Schools. The language is simple, idiomatic and forceful and the stories are highly instructive and these are sure to mould the character of young minds.

I heartily commend the study of these books in schools.

(*Sd.*) A. SANKARAN,
Superintendent of Sanskrit Schools,
Madras.

C. S. DIKSHITAR & Co.,

request Head-masters of Schools and Sanskrit Patasalas to kindly prescribe the following books in their schools.

The books have been approved by the Text-book Committees of Cochin, Travancore Madras and recommended by Mysore.

Eminent men like The Rt. Hon'ble V. S. Srinivasa Sastrigal, P. C., T. R. Venkatarama Sastrigal- C I. E., Sir C. P. Ramaswamy Iyer, Dewan of Travancore. Professor P. P. S. Sastrigal, Dewan Bahadur K. S. Ramaswami Sastrigal and several others have very highly recommended them

TAMIL

1.	Uttamar Charitam	I	0—3—0
2.	Do.	II	0—4—0
3.	Do.	III	0—5—0
4.	Do.	IV	0—5—0
5.	Do.	V	0—7—0

SANSKRIT (Devanagari)

6	Subashithamanjari		0—6—0
7.	Kathakusumamanjari or A Nosegay of Moral Stories	P. I	0—8—0
8.	Do.	P. II	0-10—0
9.	Do.	P. III	0—8—0
10.	Vikramarka Charitram		0—8—0
11.	Bhoja Charitra Sangraha		0—4—0
12.	Sabdamanjari		0—5—0
13.	Prathamapatamanjari		0—5—0

Approved by several Text-book Committees and portions incorporated in the S. S. L. C. 1941 Sanskrit Text.

I had occasin to go through the Sanskrit Books written by pandit S. Venkatrama Sastri and published by C. S. Dikshidar & Co, Kumbakonam. I also saw the orders received for these nice little books from Ahmadabad, Gondal, Bomday and numerous other places. The books have been approved by the Text book Committees of Madras, Cochin and Travancore and also recommended by Mysore,

In my opinion the books are best suited to be prescribed as text books from the first Form to the Fifth and even in the S, S. L C and Intermediate classes for Sanskrit Translation and improving the General Knowledge of the students,

It is impossible to find similar books in Sanskrit more ably written in such an easy and fluent style to meet the requirements of our High Schools and Sanskrit Patasalas,

K. L- V- SASTRI-

J. VAIKUNTA BHAT, M. A.
Supervisor of Sanskrit Schools
RAJAHMUNDRY RANGE.

Messrs C. S. Dikshitar & Co have done a great and real service to the Sanskrit world in reprinting the instructive and impressive Sanskrit books of the well-known writer, Pandit S. Venkatrama Sastrigal of Kumbakonam.

The books are judici usly graded and are written in simple, easy flowing language. I have no doubt, that these books will greatly facilitate, the teaching of Sanskrit and as such, they can with advantage be introduced as text books, in Elementary and High Schools-

Rajahmundry, }
5—12—39- }
J. VAIKUNTA BHAT,
Supervisor of Sanskrit Schools, Rajahmundry Range.

Sri. T. R. Venkatarama Sastrigal WRITES.

The three parts of Katha Kusuma Manjari consist of moral stories They are written with a verse at the head of each lesson embodying a moral followed by a story illustrating and enforcing it. The Bhoja Charitra Sangraha and the Vikramarka Charitra are stories of two Kings round whose names the Indian tradition has for centuries loved to linger. All these books are written in such easy, fluent Sanskrit that the young student of Sanskrit will find no difficulty in understanding and assimilating them- The method of study which these books initiate is modern and it has in my opinion much advantage over the ancient traditional mode of beginning the study of Sanskrit with such classical works as Raghuvamsa or Sisupalavadha.

T. R. VENKATRAMA SASTRI,
27—3—39-

South Indian boys and girls reading in Bombay, Calcutta, Delhi and other N. Indian cities, and Rangoon, Singapore, F. M. S. etc., will find our books very useful.

Curriculum for Sanskrit Schools,

ELEMENTARY III YEAR.

PROSE:- KATHA KUSUMA MANJARI
(PRESCRIBED).

Approved by the T. B. Committee, MADRAS.

VIDE FORT ST G. G.
PAGES 202, 204 OF 30—4—40.

APPLY TO:
C. S. DIKSHITAR & Co.,
KUMBAKONAM.

ஆசாரம்

[ஸ்ரீ S. வைத்தீஸ்வரய்யர், கல்கத்தா]

எந்த ஆசாரங்களையும் பூர்ணமாகவோ குறிப்பிட்டோ எழுதுவது இயலாது. சாஸ்திரமறிந்த சிஷ்டர்களிடமிருந்தே தெரிந்து கொள்ளவேண்டும். இங்கே எழுதுவதெல்லாம் அவைகளின் உட்கருத்தைத் தெரிந்த வரையில் வெளிப்படுத்தி, அவைகளை ஒருவர் முடியுமானால் அனுஷ்டிக்கவும் முடியாவிட்டால் தூஷிக்காமலிருப்பதற்காகவே.

சிறுவயது முதல் பல கலைகள் கற்று வயதாகிபொருளும் கீர்த்தியும் தேடிக்கொண்ட ராமன் ஒருநாள் தூங்கி எழுந்து யோசனை செய்கிறான்:— "நேற்று இரவு நான் படுக்கும் பொழுது என்பெயர் ராமன், இருபது வயதிலும் ராமன். 5 வயதிலும் ராமன். ஆனால் 5 ல் தெருப்புழுதியில் விளையாடினேன். 20ல் பீ. ஏ. பரீக்ஷையில்தேறி தேசதொண்டாக சட்ட மறுப்பில் ஈடுபட்டு சிறைச்சாலையிலிருந்தேன். இப்பொழுது 40ல் சட்ட சபையிலிருக்கிறேன். கில காலத்தில் மந்திரி பதவிக்கு வருவேன்." இதே மாதிரி நாகன் யோசிப்பது:—"5ல் நான் இறந்த மாட்டின் மேல் விழுந்து விளையாடினேன். 20-ல் நல்ல செருப்பு தைத்தேன். இப்பொழுது ஆலயத்தில் பிரவேசித்தேன். எல்லாரும் சமமாகிவிட்டதால் இனி ராமன் மகளை என் மகன் கட்டிக்கொள்வான்." கோவிந்தன் யோசிப்பது:— "5-ல் எனக்கு உபநயனமாயிற்று. வேதசாஸ்திர பயிற்சி செய்து 20-ல் வேதாந்த விசாரம் ஆரம்பித்தேன். இனி ஜீவன் முக்தனாவேன்."

இவர்கள் பெயர் முதலிலிருந்த பெயரே. மூவரும் 40- வருஷங்களாக தினம் தூங்கி [illegible] பிரகாரம் வேலை செய்தவர்கள். பிறந்தபொழுதிருந்த அங்க அடையாளங்களே என்றாலும் உருவம் காலத்தாலும் திரிகரண வேலைகளாலும் வியாதிகளாலும் அடிபட்டு மாறியவை ராமன் ராஜஸகுணம் மிக்கவன். நகரத்திலிருந்தான். நாகன் தாமஸகுணம் மிக்கவன். சேரியிலிருந்தான் கோவிந்தன் ஸத்வகுணம் மிக்கவன். கிராமத்திலிருந்தான். இவர்கள் பெயர் போல் நிலைத்துள்ளது ஜீவாத்மா. காலையிலெழுந்து இரவில் தூங்குவதுபோன்றது பிறபிறப்பு. முதல் நாள் மனோபாவமே மறுநாளுமிருந்து தூண்டுவது போன்றது ஜன்மாந்திர வாஸனை. எண்ணம், பேச்சு, செய்கைகள் ஒவ்வொரு நாளும் விருத்தியாகி சிறிது பாகம் மறுநாளோ சில நாள் கழித்தோ பலனைத்தருவது போன்றது ஜன்மாந்திர கர்மா. அதாவது சட்ட மறுப்பு செய்துவிட்டு சிறைவாசம் தவிர்க்க முடியாது. சமத்வத்தை பலாத்காரமாக ஒரு விஷயத்தில் சாதித்த பிறகு இன்னொன்றில் தடுக்க முடியாது. விசாரம் செய்த விவேகி முக்தனாகாமலிரான். இவைபோல கர்மபலனாக வந்த வர்ணத்தையும் மாற்றமுடியாது. வர்ணமென்பதுகாலம் தேசம்குணங்களின் பாகுபாடு, வாசனை, இவைகளை ஒவ்வொரு அளவை முறை பதங்களில் ஜன்மாந்திர கர்மாவால் சேர்க்கப்பட்ட சேர்க்கையாகும். முமுக்ஷு வர்ணபேதத்தை விட்டு விடுகிறானே என்றால் அவன் தேகத்தையே ஆதரிப்பதில்லை. மறுநாள் வராமல் தேதி மாறாதது போல மறுஜன்மம் வராமல் வர்ணம் மாறுவதில்லை. ஒருதேசத்திலேயே பலநாள் இருப்பது போல ஒரு தேசத்திலேயே பலநாள் இருப்பதுபோல ஒரு வர்ணத்திலேயே பல ஜன்மங்கள் எடுப்பதும். தாபத்ரய ஈஷணாத்ரயங்களால் திரிகரண கார்யங்கள் பேதப்பட்டு ஒரு நாளோ பல நாளோ தேச விசேஷங்களிலோ சுக துக்க சோகங்களுண்டாகின்றன. அதுபோல திரிகரண கார்ய பேதத்தால் சேர்க்கை பேதப்பட்டு துக்க சோகங்களான ஜன்மங்களும் அதனால் வர்ணமாறுதல்களோ, அவர்ணமோ மனிதப் பிறவியே இல்லாத ஸ்தாவர ஜங்கமங்களாகவோ ஆகின்றன.

திரிகரண காரியங்கள் எவ்விதமிருந்தால் நன்மை உண்டு என்று வழிகாட்டுவது வர்ணாச்ரம கட்டுப்பாடுகள். ராமன் முதலானோர் அவரவர் உயர்ந்ததாக எண்ணிய சுகத்தையே நாடுகிறார்கள். எது பரமசுகமென்று உயர்ந்த உண்மையை அனுபவத்தில் கண்டறிந்து போதிப்பது வர்ணாச்ரம தர்மங்கள்.

ஒரு நாடகத்தில் கிட்டு என்பவன் சேவகனாகவும், மந்திரியாகவும், ஸ்திரீயாகவும் வேஷத்தால் மாறக் கூடுமானாலும் அந்த வேளையில் கூட எல்லாரும் அவனைக் 'கிட்டு' என்று தான் சொல்லுகிறார்கள். அவன் சேவக பாவத்துடன் நடித்தாலும் சேவகனாவதில்லை. கிட்டு மாறாதது போல அந்த ஜன்மத்தில் வர்ணமும் மாறுவதில்லை. பெயரைமாற்றி விட்டாலோ எனலாம். ஒன்றை அறிவதற்காக ஏற்பட்டது பெயர். 'கிட்டு' என்றதும் இவன் இன்ன அங்க அடையாளமுள்ளவன் இன்னார் மகன் என்ற ஞாபகத்தால் கிட்டு தானென்று அறிகிறோமாதலால் வேறு பெயர் வைத்துக்கொண்டாலும் உருவம் பிறப்பு மாறாது.

படிக்காரமும், கல்லுப்பும், வீரமும், கற்கண்டும் ஒரே மாதிரி தோன்றினாலும் குணம் வேறுவேறு.

ஜனசமூகமே ஒரு தேகம் போன்றது. அது தேகத்திலுள்ள கர்மேந்திரியங்களைப் போல வகுக்கப் பட்டிருக்கிறது. பிராம்மணர், வாக்கு, க்ஷத்திரியர் புஜங்கள் வைசியர் பாயூபஸ்த்திற்கு ஆதாரமாயுள்ள அடைகள். சூத்ரர் தேகத்திற்கே ஆதாரமான பாதங்கள்

கர்மேந்திரியங்கள் தங்கள் தொழிலிலீடுபட்டு தேகத்தை ரக்ஷிப்பதுபோல சமூக வகுப்பினரும் வகுப்புத்தொழிலைச் செய்து வந்தால் உலகம் செழித்து தர்ம நிலையிலிருக்கும். வர்ணத்தில் சேராத ஜனங்களிருப்பதால் அவர்களை தேகத்திற்கு வெளிப்பட்ட பிரகிருதி வஸ்துக்களாகக் கொள்ள வேண்டும். மனிதர்களாயிற்றே எனக்கேட்கலாம். மனிதரெல்லாருமே தாழ்த்தப்பட்டவர், தேவர்கள் அவர்களைக்கொண்டு ஜீவிக்கிறார்கள். பசுக்கள் தாழ்த்தப்பட்டவை, மனிதர்கள் அவைகளைக்கறந்து கொன்று தின்கிறார்கள். புல் தாழ்த்தப்பட்டது. பசு அதைத்தின்று ஜீவிக்கிறது. மண் மிகவும் தாழ்த்தப்பட்டது. புல் அதைத் தின்று ஜீவிப்பதோடு எல்லாருமே அதை ஹிம்ஸிக்கிறார்கள். இப்படியெல்லாம் அடிக்கிக்கொண்டே போனால் கதியில்லை. நாம் மண்ணைத்தூக்கித்தலையில் வைத்துக் கொள்ள வேண்டியது தான்! நான்குவர்ணங்களுடன்நான்கு ஆச்ரமங்களும்இருக்கின்றன. ஆச்ரமங்களும் தேகத்தையும் கர்மேந்திரியங்களையும் ஒத்திப்பது கவனிக்கத்தக்கது. ப்ரம்மசர்யம் என்பது பாதங்கள்போல் எப்பொழுதும் உழைப்பே முக்ய கார்யமாயுள்ளது. இல்லறம் பீஜகோஷ்த்திரங்கள்போல ப்ரவிருத்தியே முக்ய கார்யமாயுள்ளது. வானப்ரஸ்தம் புஜங்கள்போல துக்க நிவ்ருத்தியே முக்ய கார்யமாயுள்ளது. ஸந்யாஸம் வாக்குபோல் ஸத்யமும் மௌனமும் முக்ய கார்யமாயுள்ளது. சூத்ரர்களுக்கு ஆச்ரமதர்மமில்லை. அவர்கள் நைஷ்டிக ப்ரம்மசாரிகள்போல உழைப்பவர்கள். மற்ற மூன்று வர்ணத்தாருக்கும் ஆச்ரமதர்மங்கள் உண்டு.

சாஸ்திரங்களில் ஓரிடத்தில் ஆதியில் வர்ணபேதமில்லை என்றால் இன்னோரிடத்தில் பேதத்தைச் சொல்லுகிறது. Castophene என்பது சாக்லேட்டும் விளக்கெண்ணெயும் கலந்த மிட்டாய் மருந்து சாப்பிட்டால் மலப்ரவிருத்தியுண்டாகும். குழந்தைகளிடம் நல்லசாக்லெட்டுக்கும் இதற்கும் வித்தியாசமில்லையென்று சொல்வதுண்டு. சாப்பிட்டு மலங்கழிவதற்குத்தான். உண்மையில் வித்யாஸமிருப்பது தெரிந்தவிஷயம். இதே மாதிரி தர்மங்களை அன்போடு ஆதரிப்பதற்காக அஜ்ஞானத்தால் மூடப்பட்டவர்களுக்கு பேதமில்லை என்ற வார்த்தை "சாதியிரண்டொழிய வேறில்லை" என்பதை மாத்திரமோ "இட்டார் பெரியோர் இடார் இழிகுலத்தோர் என்பதை மாத்திரமோ எடுத்துக் கொள்ளக்கூடாது. இவைகளோடிருக்கும் நீதிவழுவா நெறிமுறையில் என்பதையும் கூட்டிக்கொள்ள வேண்டும். இந்தப்பாட்டால் அறிய வேண்டியது நீதிவழுவாநெறி முறையிலிட வேண்டியது என்பதே இவ்விதம் எல்லாஜாதியும் ஏழையானாலும் செய்தால் ஜாதியாலும் தனத்தாலும் கிடைக்கக்கூடிய புண்யத்திற்கு அதிகம் கிடைக்கும். தனவான்களைப் பார்த்துத்தானு மிடாதிருக்க வேண்டா மென்பதையும் ஆதிசங்கரருக்கு முழுமனதுடன் அழுகிய நெல்லிகனியிட்டதின் பெருமையையும் குசேலர் அவலைக் கொண்டுபோனதின் பெருமையையும் விளக்கவே இந்தப்பாடல். புராண இதிஹாஸங்களைவிட ஸ்மிருதி பிரமாணமுள்ளது. எல்லாவற்றிற்கும் பிரமாணம் வேதம். கீதா உபநிஷத்து இதிஹாஸத்திலுள்ளது. வேதத்தைக் கொண்டே அதற்கு அர்த்தம் செய்யவேண்டும். இந்திரியத்தில் இடுபட்ட மனதைக் கொண்டு எந்த உபநிஷத்தையும் விசாரிக்கலாகாது. ஆதியில் வர்ண பேதமில்லை என்று சொல்லும் இடத்திலேயே அதனை விளக்கி யிருப்பதையும் கவனிக்க வேண்டும். தற்காலம் பிரஜைகள் முதல் நாள் நினைவோடிருப்பது போல ஆதியில் பூர்வ ஜன்ம நினைவுடன் இருந்தார்கள். (ஆதியில் என்பது கி. பு., கி. மு., என்று மேல் நாட்டு கிணற்றுத் தவளைகள் போல வைத்துக் கொள்ளக்கூடாது. சிருஷ்டித்துவக்கத்தில் அதாவது பூமியிலுள்ள மணலைப் போல் எண்ண முடியாத வருஷங்கள் என்பது பொருந்தும். Geologists சொல்லும் (வருஷக் கணக்கை கவனிக்க) அதனால் பாவம் செய்ய வில்லை. மரணமுமில்லை. ஆகையால் மறதியும் மிருத்யுவும் உண்டாக்கப்பட்டன. மறதியால் பாவமும் தொழில் பேதங்களும் உண்டாகி மிருத்யுவுக்கு இரையானார்கள். ஆனால் சிலர் கடவுளைத்தொழுது ஸத்யமார்க்கத்தில் இருத்தார்கள். வர்ண பேத முண்டாயிற்று. நம்பினால் இது முழுவதும் நம்ப வேண்டும். பாவமும் மிருத்யுவும் இல்லாமல் செய்ய முடியுமானால் வர்ண பேதம் வேண்டாம்.

ஸாம தான பேத தண்டங்களால் ராஜ்யம் நடக்கிறது. ஒரு நாட்டை வேறு நாடு ஆளவேண்டுமானால் பேத உபாயமே சிறந்தது. பிரஜைகளில் ஒருவருக்கொருவர் விரோதமிருந்தால் தான் மூன்றாவது மனிதனிடம் அடங்குவார்கள். பாதிரிமார்களும் மேயோக்களும் தோஷங்களைக் கற்பிக்கும் சரித்திரக்காரர்களும் செய்து வந்த பிரசாரங்களில் அகப்பட்டு தாங்களும் சாஸ்திர விசாரம் செய்யாமலேயே சீர்திருத்தமென்று வேறு விரோதங்களுக்கு விதை போடுவது கூடாது. எவ்வளவு கெட்ட பழக்க வழக்கங்களிருப்பதாக நினைத்தாலும் ஹிந்து நாகரீகம் அநாதியாயிருப்பதின் காரணத்தை விசாரிக்க வேண்டும். மேல் நாடுகளில் எவ்வளவு நல்ல பழக்கவழக்கங்களென்று தோன்றினாலும் அவை சுவ

(தொடர்ச்சி 3ம் பக்கம் பார்க்க)

ஆசாரம்

(எஸ். வைத்தீஸ்வர அய்யர், கல்கத்தா.)

(2-ம் பக்கம் தொடர்ச்சி.)

நாடாகி அந்த காகரீகமே மறையுங்காலத்தைப் பார்க்கிறோம்.

தேவாலய சிப்பந்திகள் கூலிவேலை செய்வதால் யஜமானனாயிருப்பவன் அதிகாரம் செய்கிறான். சேவகமே நமது தொழில் என்று நினைப்பவர்கள் கேட்கிறார்கள். அவ்விதம் நினையாதவர் கேட்பதில்லை. சில சேவகர்களை தடியடிக்கு ஏவும் பொழுது அவர்கள் அதிகாரியைப் பார்த்து “நீங்கள் அஹிம்ஸைக்கு ஸத்யம் செய்தவர்களாயிற்றே” என்றாவது “சாதுக்களை ஹிம்ஸிப்பதா” என்றாவதுசொல்லி தங்கள் தொழிலை செய்யாமலிருந்தால் என்னவாகும் ஏருழுகிறவன் “ஐயோ கிருமிகள் இறக்கின்றனவே” என்று உழாதிருந்தால் என்னவாகும்? ஆலயப்ரவேசத்தால் பலாத்காரத்திற்கு அனுமதி கிடைத்துவிட்டதென்று பிறர் மனையில் புகுந்து பொருள் ஸ்திரீகளை அபகரித்தால் என்னவாகும்? பாதங்களும் கைகளும் சமமென்று கைகளைப் பூமியில் ஊன்றி உடம்பைத்தூக்கி கைகளால் நடப்பது போலுள்ளது தாழ்த்தப் பட்டவரென்று அவர்களை உயரத்தூக்குவது. சிறிது நேரத்தில் உடம்பெனும் தேசமே சேதமாவதல்லாது வேறுபயன் இதற்கில்லை. ஆகவே சேவகாவிருத்தியிலிருப்பவர்களுக்கு வேறு விருத்தி ஆசாரங்களைக் கற்பிப்பது கூடாது. மேலும் சேவகவர்ணத்திலிருப்பவர்களையே சேவகர்களாக நியமிக்கவேண்டும். அவர்கள் சேவகந்தான் பயனுள்ளது.

தாம்பூலத்தின் பிறப்பு வளர்ப்பு

ஸ்ரீ மஹாஸ்காந்தம் நாகரகண்டம் 210-அத்யாயத்தை ஸ்ரீ சங்கர மடத்தில் ஸ்ரீவத்ஸ சர்மாவால் உபன்யஸிக்கப் பட்டது.

பாற்கடலிலிருந்து தோன்றிய ஐராவதத்தை தேவேந்த்ரன் நந்தநவனத்தில் ஓர் மரத்திலே கட்டினார் அமிருதபானம் செய்தபின் சிறிது மிகுதியுடன் அமிருத கலசமும் அதனருகேவைக்கப்பட்டது. வெள்ளயானையின் மத ஜலமும் அமிருத கலசமும் ஏககாலத்தில் பெருகி நந்தநவனத்தில் பாய அங்கிருந்து ஓர் கொடி தோன்றி யானைத் தரி மரத்தின் மீது படர்ந்தது.

தன்வந்தரி அதற்கு நாககட்டுத்தளியில் வளர்ந்ததால் நாகவல்லி என பெயரிட்டு அதைப் பாக்கு சுண்ணாம்பு கத்தைக்காம்புகளுடன் புஜித்தால் காமசக்தியளிக்கும் குணத்தை இந்த்ரனிடம் கூறினார் அன்று முதலவனதை உபயோகித்து வந்தான்.

வாணீவத்ஸகரனெனும் வேந்தன் சக்ரனை ஆராதித்து அவரளித்த விமானத்திலேறிப்ரதிதி நமவர் சபைக்கு போவது வழக்கம். இந்த்ரனவருக்கு தாம்பூலமளிக்கஅதைஅவனியில்வளர்க்க அரசனவாகொண்டு வளர்த்தார். பூமியிலுள்ளோர் அதைப்புஜித்து காமாந்தர்களாகியாகாதி கர்மாக்களை விட்டனர். இக்குறையை தேவர்கள் பிரும்மாவினிடமறிவிக்க சென்றபோது பாற்கடலிலிருந்து பிறந்த தாரித்ரிய தேவதை, பிராமணர் வீட்டில் வஸித்து நான் வெறுப்படைந்தேன். வேறு ஸ்தலம் கொடுமென்று கேட்டார் பிரும்மா வெத்திலையின் நரம்பு நுனி சுண்ணாம்பு, வைத்த வெத்திலை இரவில் கத்தக்காப்பு, இங்கு வஸி என்றார். ஆதலினிவைகளை உபயோகிக்கலாகாது.

V. S. ஜயராமன்

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. சர்மா

புதுஸபை ஆரம்பமா? கல்கத்தா ஸ்ரீம. ம அநந்தகிருஷ்ண சாஸ்திரிகள் தற்சமயம் நமது ஸநாதநதர்மத்தை ரக்ஷிக்க, ஸகல மடாதிபதிகளை அங்கத்தினர்களாக கொண்டதும் சுதேசராஜாக்களின் ஆதரவைப் பெற்றதும் மிக செல்வாக்கும் பலமுமுள்ளதான ஓர் புதிய ஸபையை ஆரம்பிக்க தீவ்ரமுயற்சி செய்வதாக தெரிகிறது!

ஸபை நோக்கம் !! பாலகங்காதரதிலகரைப்போல் கொடுத்த சீர்திருத்தத்தைப் பெற்று அரசாங்கம் ஒத்துழைக்குமளவில் நாமும் அத்துடன் ஒத்துழைத்து எந்த மதத்திலும் அரசாங்க சட்டம் உள்ளே புகாமல் பார்த்துக்கொள்வதாம்!¡ எல்லாம் ஸரி—ஆனால்?

உள்ளதின் கதியாது? பற்பல பெயர்களுடன் விளங்கிவந்த ஸபைகளை வர்ணாச்ரம ஸ்வ்ராஜ்ய ஸங்கம் என்ற ஒரே பெயரின் கீழ்கொண்டுவந்து அகில இந்திய இயக்கமாக்க புகீரதப்ரயத்நம் செய்யப்பட்டு கொஞ்சம் உருவாகி வேலை நடக்கிறது? இதின் கதியாதாகும்! அன்றியும் புதிது புதிதாக ஆண்டுக்கோர் ஸபை தோன்றின் உலகு மதிப்புக்கு அது பாத்ரமாகுமா?

ஆக்ஷேபமிருந்தால்!! வர்ணாச்ரமஸ்வராஜ்ய ஸங்கமென்ற பெயரில் மடாதிபதிகளுக்கோ மகாராஜாக்களுக்கோ ஏதேனும் ஆக்ஷேபமிருந்தால் மதரக்ஷணம் அவச்யமெனக்கருதி இதில் சேராமலே வேலை செய்பவர்களுக்கு உதவியளித்து உத்ஸாஹமூட்டலாம்! அல்லது அவர்கள் தனித்ததோர் ஸபை ஏற்படுத்திக்கொண்டு தர்ம தொண்டு செய்யலாம்! இதற்கும் விரோதமில்லாதிருக்கும்!!

சிறிது கவனிக்கவேண்டும்! தென்னாட்டில் ஹிந்து மஹாஸபை பரவுகிறது. அதனால் சில நன்மைகள் உண்டாயினும் பலருள்ளத்தில் அதுவே நமது தர்மத்திற்காக உழைக்கின்ற ஸபை என்ற எண்ணத்திற்கு இடமளிக்கின்றது. அதனால் வருந்தீமை பற்பல; பின்னர் விளங்கும்! அச்சபையினால் உண்டாகும் நன்மைகளை ஆமோதித்து அது தர்மரக்ஷகஸபை இல்லை என்பதை எதிர்ப்ரசாரம் செய்யத்தான் வேண்டும்!

ராஷ்ட்ரஸேவகஸபை! ஹிந்துமஹா ஸபையினுதாவில் வடநாட்டிலே ஷை ஸபை ஓர் வகுப்பாக அதாவது தன் ஸமூஹத்தைக் காத்துக்கொள்ள ஓர் பட்டாளம் போல் பழக்கப்படுகிற ஒன்றை நடத்துகிறது. அதில் ஊக்கமுள்ள நமது ஓர் தலைவர் தன்

ஜோதிர்மடத்து ஸ்வாமிகளும் கலப்பு மணமும்

ஓர் மறுப்பு

நமது சோமதேவ சர்மா அவர்கள் நல்ல வாக்மி. அனேக புராணபிரவசனம்செய்து, நமது வர்ணாச்ரம தர்மத்தை பிரவசனம் செய்து வருவதும், பாடுபட்டு வருவதும் நமது ஆர்யதர்ம வாசகர்களுக்கு நன்கு தெறிந்ததே. எனக்கும் நேரில் அவருடன் பரிச்யம் உண்டு.

நமது சனாதனப்ரசாரத்திற்கு உண்மையான சனாதனிகள் வாக்மிகள் தேவையாய் இருப்பதுடன் அவர்களில் முக்கிய புருஷராய் சோமதேவ சர்மா வேலை செய்து வருவது பாராட்டத்தக்கது, ஜூன்மீ 20உ ஆர்ய தர்மத்தில் ஷையாரின் மறுப்பில் சுவாமிகள் கலப்பு மணத்தை ஆதரிப்பதாகக் கூறப்படுகிறது. ஒரு பேப்பரிலும் ஷை அபிப்பிராயத்தில் ஸ்வாமிகள் பேசியிருப்பதாக தெறியவில்லை. மெயில்பத்திரிகை ஒன்றில்மட்டும் தவறுதலாக ஒருநாள் வந்தசமாசாரம் அதே மெயிலில் பின்னால் மறுக்கப்பட்டிருக்கிறது. ஆலயப்ரவேச சட்டம் சீர்திருத்த சட்டமாகக் கொள்ளக் காரணமில்லை, கலப்பு மணம் சம்பந்தமாவது சீர்திருத்தத்தின் கீழ் வரலாம் என்பதே ஷை வாசகத்தின் கருத்தாக இருக்கிறது. அது சம்பந்தமாக மீண்டும் அந்த விஷயத்தை சோமதேவ சர்மாவின் கவனத்திற்குக் கொண்டுவா விருப்பதற்கு வருந்துகிறேன். ஆகையால் உடனே நமது ஆர்யதர்ம வாசகர்களுக்கு விஷயத்தை விளக்கி தமது தப்பிதத்தை உணரும்படி செய்யுவார் என்று நம்புகிறேன். ஆர்யதர்மம் இந்த விஷயத்தை முக்கியமாகக் கவனித்து நடவடிக்கை எடுத்து பொதுவாக வேலை செய்து வரும் பக்ஷத்தில் ஒரு முகமாக யாவரும் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஜி. ஏ. விஸ்வநாத சாஸ்திரிகள், மதுரை.

புத்ரனையே அனுப்பியது நலமே. ஆனால் அங்கு லங்கரசாப்பாடு போன்றதை எப்படி தடுப்பர்? என்பதே நமது கேள்வி?

பூர்ணமாக ஆதரிப்போம்!! ஸ்ரீ மடம் முத்ராதிகாரிகள் நமது ஆர்யதர்மத்தையே தங்கள் ப்ரசார பத்ரிகையாக கொள்ள வேண்டும் என்பது எல்லாவகையிலும் மிகவும் நியாயமாகவும் தர்மமாகவும் உசிதமாகவும் இருக்கின்றது. அத்துடன் ஒவ்வோர் முத்ராதிகாரியும் ஊருக்கோர் பத்ரிகை வரும்படி செய்வதும் பத்ரிகாதிகாரிகள் அவர்களுக்கு சிறிது சலுகை காட்ட வேண்டியது மிக மிக அவச்யமாகும்!!

கும்பகோணம் பெரியதெரு

V. R. சீனிவாஸய்யங்கார் எஸ்டேட்.

ஸ்தாவர சொத்துக்கள் ஏல நோட்டீஸ்.

கும்பகோணம் தாலூகா திருவிடமருதூருக்கு சமீபமுள்ள மாங்குடி, ஆண்டலாம்பேட்டை கிராமங்களில் ஷை எஸ்டேட்டுக்கு சொந்தமான சுமார் 120 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள நன்சை,புஞ்சை,தென்னந்தோப்புக்கள், உயர்ந்த ஜாதி ஒட்டுமாந்தோப்புக்கள், வாழைக்கொல்லைகள், சவுக்கைத் தோப்புக்கள், மனைக்கட்டுகள் முதலியவைகளை ஷை எஸ்டேட் டிரஸ்டிகளால் ஷை மாங்குடி கிராமம் அக்ரஹாரத்தில் 6—7—40 சனிக்கிழமை மாலை 3-மணிக்கு பஹிரங்கமாக ஏலம் போடப்படும். ஷை ஏல விபரம் டிரஸ்டிகள் ஆபீஸில் தெரிந்து கொள்ளலாம்.

கும்பகோணம், 6—6—'40.

K. Rm. சிங்காரம் செட்டியார்,
S. மகாலிங்க அய்யர்,
டிரஸ்டிகள்,

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்

விக்ரம-௵ ஆனி-௴ 14௳

சாச்வதமான சாந்திக்கு வழி ஏது?

இந்த வாரத்தில் இரண்டு விசேஷ சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. தைர்யத்தோடும் ஏராளமான ஸாதனங்களோடும் தீவ்ரமாக எதிர்த்து யுத்தம் செய்து வந்த பிரான்ஸ், ;போராட்டத்தை நிறுத்த முற்பட்டு விட்டது. 20 வருஷமாக தேசகால வியவஸ்தை இல்லாமல் எங்கும் ஸர்வ ஜனஸாதாரணமாக அஹிம்ஸையை போதித்து வந்த காங்கிரஸ், தற்காப்பிற்காக உள்நாட்டுக் கலகங்களை அடக்கவும், வெளிதேசத்தாரின் படையெடுப்பைத் தடுக்கவும், அஹிம்ஸா முறையை கையாளுவதில்லையென்று தீர்மானித்து விட்டது. இந்த இரண்டு ஸம்பவங்களும், நவீன லோகத்திற்கு ஒரு பெரிய படிப்பினை. நவீன லோகத்தில் மனிதனுடைய மேதாபலத்தையும் அதனால் ஏற்படுகிற ஸாதனங்களையும் தீர்மானமாக நம்பி தர்மம், தெய்வம், பரலோகம் இவைகளை அடியோடு அங்கீகரிக்காமல் மனிதவர்க்கத்தின் க்ஷேமத்தை மேனாட்டினர் கவனிக்க ஆரம்பித்தார்கள். அதனாலேயே இவ்வித ஆபத்து ஏற்படுவது ஸஹஜமாகி விட்டது. எல்லோரும் போர்வீரர்களாகலாம். யுத்த தடவாளங்களை உற்பத்தி செய்வதில் வியவஸ்தையில்லை. ஆயுதங்களை உபயோகிப்பதிலும் வியவஸ்தை இல்லை. இந்நிலையில் மனித வர்க்கம் எவ்விதம் சாந்தியோடு வாழ முடியும்?

மேலும் ஒரு யுத்தம் முடிகிறது. தாத்காலிக சாந்தி ஏற்படுகிறது. ஒருவர் ஜெயிக்கிறார். ஒருவர் தோற்கிறார். தோற்றவருக்கு க்ரோதமும்பழிவாங்குமெண்ணமும் எல்லையின்றி உண்டாகுகிறது. ஜயித்தவருக்கும் எல்லையன்ற ஆசை. இதைநிறைவேற்ற இருவரும் மனித சக்தியை பூர்ணமாக உபயோகிக்க முற்படுகிறார். நாகரீகத்தில் தர்மா தர்மம் வ்யவஸ்தை, தைவபயம் இவை இல்லை. இதனால் நிரங்குசப்ரவிர்த்தி ஏற்படுகிறது. தளவாடங்கள் குவிந்தால் யுத்தம்தான். இப்படி சுழன்று கொண்டிருந்தால் ஸமாதானம் எப்படி சாசுவதமாக இருக்கமுடியும்.

25 வருஷங் களுக்குள் இரண்டு கோரயுத்தங்கள்நடைபெற்று விட்டன யுத்தத்தில்ஜெயித்தவருக்கும், தோற்றவருக்கும், மனதில் சாந்திகிடையாது. ஒரே குழப்பம். இதற்கு காரணம் என்ன? நாகரித்தின் அடிப்படையில் உள்ள கோளாறு தான். தகுந்ததாக இல்லாதது தான். மனிதவர்கத்தின் க்ஷேமத்தை சாச்வதமாகச் செய்வதற்கு மேற்கு தேசத்தினர் ஹிம்ஸையையும் யுத்த தடவாளங்களையுமே ஸாதனமாகக் கருதுகிறார்கள். ஸயன்ஸ் சாஸ்திரத்தை நன்கு உபயோகித்து யுத்த தடவாளங்களைச்செய்து யுத்தம் புரிந்து பிறரை ஜெயித்து ஸமாதானம் நிலவச்செய்வது என்பது மேல் நாட்டாரின் போக்கு. உண்மையில் இது சாசுவதமான சாந்திக்கு வழியா? அல்ல. 25 வருடங்களுக்கு முன் ஆயுத பலத்தைக் கொண்டுதான் யுத்தம் நடந்து ஸமாதானம் நடந்தது. அந்த ஸமயம் இந்த யுத்தகோரம் மறுபடியும் ஸம்பவிக்காமலிருப்பதற்குத்தான் ஏற்பாடும் செய்யப்பட்டது. ஆனால் இன்று மறுபடியும் யுத்தகோரம் தலைக்காட்டுகிறது.

இன்று பணிந்தவருக்கு, யந்திர ஸாதனங்கள் விசேஷமாகக் கிடைக்கிற நாளில் இதைக் காட்டிலும் இன்னும் கோரமான யுத்தத்தை நாம் எதிர்பார்க்க வேண்டியது தான். இப்படி மனித பலத்தை நம்பி தர்மம் வியவஸ்தை இவைகளில்லாமல் இருக்கும்வரை மனித வர்க்கத்தின் சாச்வதமான சாந்தியை நாம் எதிர்பார்க்க இடமில்லை.

ஆகவே யுத்த காலத்திலோ ஸமாதான காலத்திலோ மனிதன் வ்யவஸ்தையில்லாமல் நடந்து காமக்ரோத பரவசனாக கார்யங்களைச் செய்ய முற்படுங்கால் தர்மா தர்மங்களே அவனுடைய போக்கை வ்யவஸ்தை செய்கிறது. வ்யவஸ்தையோடு கார்யங்கள் நடைபெற்றுவந்தால் ஸமூஹத்தில் சாச்வத சாந்தி ஏற்படும்.

அஹிம்ஸை வேண்டியது தான் அதற்கும் ஓர் எல்லை உண்டு. ஆனால் அதை கவனிக்கும்போது மனித வர்க்கத்தின் இயற்கையான தோஷங்களான காமக்குரோதாதிகளை யாரும் அலக்ஷியம் செய்யமுடியாது.

காமக்குரோதாதி குணங்கள் மனிதவர்க்கத்திற்கு இயற்கையாக அமைந்திருக்கும் வரை விலக்கற்ற அஹிம்ஸை பயனளிக்கக் கூடியதல்ல. காந்திஜி இன்றுவரை ஸர்வ ஜன ஸாதாரணமாக அஹிம்ஸை போதித்து வருகிறார். அவர் ஒரு பிரமாணத்தையும் வியவஸ்தையும் அங்கீகரிக்க வில்லை. இந்நிலையில் அவர் சொல்லும் அஹிம்ஸை அனுபவ ஸாத்தியமற்றது. என்றே சொல்லி வந்தோம். மனிதவர்க்கத்தில் உள்ள மிருக சக்திகளை நாம் ஹிம்ஸையைக் கொண்டு தான் போராட வேண்டும். இந்த உண்மையை பிரமாணம் மூலமாகத் தான் அறியலாம். தர்மா தர்மங்களை அங்கீகரிக்கும் வர்ணாச்ரமிக்கு தான் இதன் தத்துவம் நன்கு விளங்கும்.

ஸனாதன தர்மம் கால தேசங்களை அனுஸரித்து அதிகாரிக்குத் தகுந்தாற்போல் ஹிம்ஸையும் அஹிம்ஸையும் போதிக்கிறது. வ்யவஸ்தையின்றி அஹிம்ஸையை கையாளுவது இயற்கைக்கு ஏற்றதல்ல.

மேற்கு தேசம் வியவஸ்தை இல்லாமல் மனித சக்திக்கு மதிப்புக்கொடுத்து மனித நாகரீகத்தை வீணாக்குகிறது. காந்தியும் வியவஸ்தை இல்லாமல் அஹிம்ஸையை போதித்து தோற்று விட்டார். இந்நிலையில் மனித வர்கத்தின் சக்தியைஉபயோகிப்பதிலும் அதனால் ஏற்படக்கூடும் ஸாதனங்களிலும், வியவஸ்தை, தர்மம், இவைகளை போதிக்கும் வர்ணாச்ரமதர்மமே மனிதவர்கத்தின் சாச்வதமான சாந்தியை ஸ்தாபிக்க முடியும்.

ஹிந்துக்களே அமெரிக்காவை முதலில் கண்டு பிடித்தார்கள்

சரித்திரக்காரர்கள் கொலம்பஸ் என்பவரே அமெரிக்காவை முதலில் கண்டு பிடித்ததாகக் கூறுகின்றனர். உண்மையில் அமெரிக்காவிலுள்ள ஜனங்களின் மதம் பழக்க வழக்கம் இவைகளை கவனித்தால் கொலம்பஸுக்கு முன்னாலேயே ஹிந்துக்கள் அமெரிக்காவோடு ஸம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தார்கள் என்று தீர்மானமாகிறது.

சரித்திரத்திற்கு எட்டாத காலம் முதல் வெகு நாட்கள் வரை ஹிந்து மதமே அமெரிக்காவில் இருந்து வந்தது. கொலம்பஸ் அமெரிக்காவைபார்க்கும் பொழுதும் அங்கு இந்திய நாகரீகம் மதம் இவைகளை கவனித்தார் இந்தநாகரீகம் இந்திய நாகரீகத்தோடு பலவகையில் ஒன்று இருப்பதைக் கொண்டே அவர்களை Indians இந்தியர் என்று பெயரிட்டார். ஆனால் கிறிஸ்தவ மெஷினரிகள் உலகம் முழுவதும் சுற்றி அங்குள்ள மதங்களை அழித்துகிருஸ்துவமதத்தைபரப்ப முயற்சித்த காலத்தில் பல தேசத்தில் உள்ள மதங்களும் பழக்க வகிக்கங்களும் அழிக்கப்பட்டு விட்டன. அவ்விதமே அமெரிக்காவில் இருந்த மதமும் அழிய ஆரம்பித்துவிட்டது. அங்கு இருந்த கல்வி நாகரீகம் இவைகளை அழித்ததில் ஸ்பெயின்காரர்களுக்கு பூர்ண பங்கு உண்டு என்று சரித்திரக்காரர்களே ஒப்புகிறார்கள்.

அங்கு உள்ளவர்களை சிகப்பு இந்தியர்கள் என்று கூறுகிறார்கள் ஆனால் அவர்களுடைய வர்ணம் சிகப்பு அல்ல. Brown வர்ணமே. அங்கு உள்ள ஜனங்களின் பூர்விக புருஷர்கள் யார் என்ற விஷயத்தில் சுமார் 42 வித அபிப்ராயங்கள் நிலவி வருகின்றன. ஒரு சிலர் அவர்கள் இஸ்ரேல் தேச ஜனங்களைச் சேர்ந்தவர்களென்று கூறுகிறார்கள். ஹிந்துக்ரந்தங்களில் உள்ள பாதாளதேசம் என்பதை கவனித்தால் ஹிந்துக்களே அத்தேச ஜனங்களின் பூர்விகபுருஷர்கள் என்பது தெளிவாகும்.

மத்ய அமேரிக்காவில் உள்ள ஆலயங்கள் இந்திய ஆலயங்கள் போலவே இருக்கின்றன. அங்குள்ளவர்கள் தங்களை ஸூர்யவம்சத்தினர் ஒருஸமயம் ஆண்டார்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். மத கார்யங்களிலும் ஒற்றுமை காணப்படுகிறது. இதனால் ஹிந்து ஏகாதிபத்யம் மெக்ஸிகோ வரை நீண்டு இருந்ததாகத் தெரிசிறது.

அவர்களுடைய ஆலயங்களில் ஸூர்யனே இன்றும் முக்ய தெய்வம். இறந்த பிறகு ஸூர்ய லோகத்திற்கு போவதாக அவர்கள் நம்புகிறார்கள். ஊன்றி கவனித்தால் 100க்கணக்கான விஷயங்களில் ஒற்றுமை வெளியாகிறது. வடக்கு அமெரிக்கர்கள் இன்றும் ஸோமயாகம் செய்துவருகிறார்கள். அநேக வைதிக கர்மாக்கள் இன்றும் அவர்களிடம் காணப்படுகிறது.

ஹிந்துக்கள் போலவே ராமாயண பாரத கதைகளின் துணுக்குகள் இன்றும் அங்கு காண்கிறது. மெக்ஸிகோவில் ராம ராவண யுத்தம் உத்ஸவமாக கொண்டாடப்படுகிறது. மெக்ஸிகோ மியூஸியத்திலுள்ளசின்னங்களை கவனித்தால் நான்கு யுகம் அபிப்பிராயம் அங்கிருந்தது வெளியாகிறது.

மத்ய அமெரிக்காவில Kush Ko என்றவிடத்தில் உள்ள ஆலயம் Ghar- Kanch சொல்லப்படுகிறது. ராமனுடைய குமாரன் குச

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க.)

குறிப்புகள்.

வைஸ்ராய்க்கு விசேஷாதிகாரம்

யுத்த காலத்தில் இந்தியாவிற்கும் பிரிட்டனுக்கும் போக்குவரத்து சாதனங்களில் ஏதாவது தடை ஏற்படுமென்று எதிர்பார்த்து முன்னெச்சரிக்கையாக வொயிட் ஹால் ஸர்க்காரைக் கலக்காமலே அவசியமான கார்யங்களைச் செய்ய வைஸ்ராய்க்கு விசேஷாதிகாரங்களை தத்காலிகமாக கொடுக்கக் கூடிய சட்டமொன்றை செய்ய இங்கிலாந்து ஸர்க்கார் பார்லிமெண்டில் ஸமர்ப்பித்து இருக்கிறார்கள். இந்த அதிகாரத்தின் மூலம் நியமனங்களைக் செய்யவோ, கவுன்சில் உத்திரவுகளை திருத்தவோ வைஸ்ராய்க்கு அதிகாரமேற்படும். இந்த விசேஷாதிகாரம் அளிக்கப்படாவிட்டால் மேற்சொன்னவைகளை பிரிட்டன் செய்தால் தான் சட்ட பூர்வமானதாகும். இது மட்டுமல்லாமல் இந்தியா சட்ட சபையின் அதிகாரத்தில் உள்ள தடைகளையும் நீக்கவும் இடமேற்படும்.

காரியக்கமிட்டி ஞானோதயம்

காந்திஜீயே வழிகாட்டி என்றும் அவருடைய அஹிம்ஸா முறையே எல்லாவற்றிற்கும் ஏற்றது என்று 20 வருஷங்களாக கூக்குரலிட்டு வந்த காங்கிரஸ் தனது கார்யக் கமிட்டி மூலம் ஒரு முக்யமான தீர்மானத்தை செய்து விட்டது. அத்தீர்மானத்தில் காந்திஜீ வற்புறுத்தும் பூர்ண அளவு அஹிம்ஸையை கடைபிடிக்க முடியாதென்றும், வெளி தேசத்தார் இந்தியா மீது படை எடுத்தாலும், உள்நாட்டு கலஹங்கள் ஏற்பட்டாலும் அஹிம்ஸா முறையை கையாள முடியாதென்றும் இவ்விஷயத்தில் காந்திஜீ பின்பற்ற முடியாதென்றும் தீர்மானித்து விட்டது.

ஜர்மன்—பிரான்ஸ் ஸமாதானம்

கோரமான யுத்தகிற்குப் பிறகு பெப்டெயின் தலைமையில் உள்ள பிரஞ்சு ஸர்க்கார் ஸர்வாதிகாரிகளுடன் ஸமாதானம் செய்து கொண்டு விட்டது. இதன் விளைவாக ஜர்மன் இத்தாலி கவர்மெண்டுகள், பிரான்ஸுடன் நடந்து வந்த யுத்தத்தை நிறுத்தி விட்டார்கள். ஜர்மன் ஸர்வாதிகாரி 24 நிபந்தனைகளை வெளியிட்டார். இவை எல்லாவற்றையும் பெப்டெயின் ஸர்க்கார் ஒப்புக்கொண்டு விட்டது. இத்தாலிக்கும் பிரஞ்சு ஸர்க்காருக்கும் ஏற்பட்ட ஸமாதான நிபந்தனை வெளி வரவில்லை. 48 மணி நேரத்தில் பூர்ண விபரம் பிரான்ஸ், இத்தாலி ஜர்மன் ஸர்க்கார்களால் வெளியிடப்படும். பிரிடிஷ் ஸ்தானீகர் பிரான்ஸை விட்டு புறப்பட்டு விட்டார். பிரஞ்சு மந்திரி ஸபையில் முன் மந்திரியாகவிருந்த ஜெனரல் டிகாலிஸ் பெட்டெயின்ஸ் ஸர்க்கார் சரணகதியை ஒப்பவில்லை. அந்த ஸர்க்கார் பிரதிநிதித்வம் உள்ளதல்லவென்று கூறுகிறார். பிரஞ்சு தேசிய கமிட்டி ஒன்றை அமைத்திருக்கிறார்.

மறுபடியும் காந்திஜீ—ஜின்னா—வைஸ்ராய் ஸந்திப்பு

வைஸ்ராய் தன்னுடன் முக்யமான விஷத்தைப்பற்றி கலந்து பேச முஸ்லீம் தலைவர் ஜின்னா அவர்களையும் காந்திஜீயும் ஸிம்லாவிற்கு அழைத்திருக்கிறார்.

காரைக்குடி

ஸ்ரீ சங்கராச்சார்யா ஸ்வாமிகள் விஜயம்

ஸ்ரீ ஆவணி சிருங்கேரி ஜகத்கு சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள் கோட்டையூரிலிருந்து இவ்வூருக்கு 23—6—40 உ காலை 9-மணிக்கு விஜயமானார்கள். உள்ளூர் பிராமணர்கள் நகரபிரமுகர்கள் மேளதாளத்துடன் செக்காலை ரோட்டில் இருக்கும் செல்லையா பிள்ளை மரக்கடையின் சமீபத்திலிருந்து பூர்ணகும்பத்துடன் வேதகோஷம்ஒலிக்க வரவேற்று கல்லுக் கட்டி சுற்றி முத்துபட்டணம் அக்ரஹாரத்தின் வழியாக ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு துவாதசி மடத்தில் சுவாமி எழுந்தருளியுள்ளார்கள். ஒவ்வொரு வீட்டின் முன்னும் பூர்ணகும்ப ஹாலத்தி வைபவம் நிகழ்ந்தன. பக்த கோடிகள் வழி நெடுக உபசாரம் செய்தனர். காரைக்குடியில் குறிப்பிட்ட நேரங்களில் உபன்யாச ரூபமாக அருள்மொழி பகர்வார்கள். (ந-நி)

மதுரை ஆலயப்பிரவேச கேஸ்.

ஹைகோர்ட்டில் தடை உத்திரவு

மதுரை ஸப் கோர்ட்டில் நடந்து வரும் மீனாக்ஷி கோவில், "ஆலயப்பிரவேச" வழக்கில் ஸப்ஜட்ஜ், மேற்படி கோவிலின் பழக்க வழக்கங்களை யொட்டி இன்ன ஜாதியார் இன்னின்ன விடங்களிலிருந்துதான் ஸ்வாமி தர்சனம் செய்யலாமென்பதைப்பற்றி விசாரணை செய்யப்போவதாகச் சொல்லி ஜூலை ௴ 5௳ வாயிதா போட்டிருந்தார்.

இவ்விஷயமாக ஸர். அல்லாடி கிருஷ்ணசாமியர் ஹைகோர்ட்டில் அப்பீல் மனு கொடுத்திருப்பதால் அந்த மனு முடிவு பெறும் வரை ஸப் கோர்ட் விசாரணையை நிறுத்திவைக்கும்படி ஹைகோர்ட் உத்திரவு செய்திருக்கிறது.

ஆலயப்பிரவேச துக்கதினம்
8—7—40 அன்று கொண்டாடவேண்டும்.

அகில இந்தியா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க சார்ய தக்ஷகர் ஸ்ரீமான் ராவ்சாகேப் என். நடேசய்யர் அவர்கள், மதுரையிலிருந்து கீழ்கண்ட ஓர் வேண்டுகோள் விடுத்துள்ளார்:—

அகில இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள ஹிந்துக்கள் அனைவரும் 8—7—40 அன்றையதினம் ஆலயப்பிரவேச துக்கதினத்தை கொண்டாட வேண்டும். சாந்தமான ஊர்வலங்கள் நடத்தியும், அசுத்தப்படுத்தப்படாத அந்தந்த ஊர் கோவில்கனில் பிரார்த்தனைகள் நடத்தியும், காங்கிரஸின் அசாஸ்த்ரீய ஹிந்துத்வத்திற்கு நடவடிக்கைகளை கண்டித்தும், பிரிட்டிஷ் சேனைகளுக்கு வெற்றியும், உலக சமாதானத்தை மீட்கவும் பழக்க வழக்கங்களை யொட்டி கோவில்களில் பிரார்த்தனைகள் நடத்தஉதவும்படி மதராஸ் ஆலயப்பிரவேச 22/1939 சட்டத்தை நீக்கவோ அல்லது அதை தடை செய்துவைக்கவோ மேலதிகாரிகளை வேண்டிக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றவேண்டும்.

ஸ்ரீ ராமா எலிமெண்டரி பாடசாலை, பெரியதெரு, கும்பகோணம்.

பெற்றோர் சங்கம்

1940௵ ஜூன்-௴ 24ந்தேதி திங்கட்கிழமை காலை 9-15 மணிக்கு இப்பாடசாலையின் பெற்றோர் சங்கத்தின் கூட்டமொன்று, தற்போது லீவிலிருக்கும் பாடசாலைகளின் உதவிச் சோதனையாளர் ஸ்ரீ A. ஸ்ரீனிவாஸ அய்யங்கார், B. A., L. T., அவர்கள் தலைமையில் தெய்வ வணக்கத்துடன் ஆரம்பமாயிற்று. அது சமயம் பிள்ளைகளின் பெற்றோர்களாகிய பல வக்கீல்களும், பிரபல உத்தியோகஸ்தர்களும் வியாபாரிகளும் விஜயம் செய்திருந்தனர்.

தலைவரவர்கள் தமது முன்னுரையில் பாடசாலைகளும், அதன் பெற்றோர் சங்க அவசியத்தையும் விரிவாக சொற்பொழிவாற்றினார். பின்பு இப்பாடசாலை சிறுவர் சிறுமிகளால், ஆடல், பாடல்களும் தஞ்சை ஜில்லா கல்வியதிகாரி விடுத்த சுகாதார சம்பந்தமான பாட்டுக்கள் பலவும் இனிது நடைபெற்றன.

பின்னர் காலை 10-மணிக்கு மேல் கலைமகள் உருவப்படத்தை அலங்கரித்து 100 க்கு மேற்பட்ட சிறுவர் சிறுமிகள் குழாம் குழுமி வரவும், பெற்றோர்கள் பலருடனும் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலம் வரப்பெற்றது.

அச்சமயம் கும்பகோணம் ரேஞ்சு பாடசாலைகளின் உதவிச்சோதனையாளர் ஸ்ரீ R. ராமஸ்வாமி அய்யர், B. A.. L. T., அவர்களும், இளைய உதவிச்சோதனையாளர் K. L. பழனிசாமிப் பிள்ளை, B. A., L. T., அவர்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

சரியாக 11-30 மணிக்கு ஊர்வலம் பாடசாலையில் வந்து சிறுவர்களுக்கு தின்பண்டங்கள் வழங்கப்பட்டு பெற்றோர் சங்கக் கூட்டம் இனிது முடிவுற்றது. ஓ. நி.

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

னுடைய பெயரால் அந்த நகரம் ஏற்பட்டிருப்பதோடு தங்கக் கோவில் காஞ்சநகிருஹம் என்றும் கூறப்படுகிறது. இங்கு ஸூர்யனே பிரதான பிம்பம். நூற்றுக்கால் மண்டபம் மெக்ஸிகோவில் இன்றும் காணப்படுகிறது. குருகுல முறையிலேயே கல்வி போதிக்கப்படுகிறது. ஜாத கர்மாவில் 4 நாட்களில் ஹவனம் நடைபெறுகிறது. விவாஹம் முதலியவை ஹிந்துக்களுடையது போன்றதே. சதி என்பது ஸாதாரண தர்மம். மெக்ஸிகோவின் கடைசி ராணி உடன்கட்டை ஏறினாள். இந்திரன், கணேசர், சிவலிங்கம் இது போன்ற மற்றும் பல தெய்வங்கள் தொழப்படுகின்றன. தேவதாசி பழக்கம் அங்குண்டு. History of Mexico 'Government Publications) என்றபுஸ்தகத்தில் இந்தியாவிலிருந்து அமெரிக்கர்கள் வந்ததாகக் கூறப்படுகிறது. Hewit என்பவர் பாண்டவர்காலத்து பழக்கம் பல அமெரிக்காவிற்கு வந்திருப்பதாகக் கூறுகிறார்.

மிகச்சிக்கனம் பூர்ணகுணம்

'ஆத்ரேய'

குடும்ப ஔஷதப் பெட்டி.

ஸாதாரணமாக ஏற்படும் எல்லா வியாதிகளுக்கும் ஒரு சிறந்த வைத்தியருடைய உதவியைச் செய்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், பிரயாணம் செய்வோருக்கும் அத்யாவசியமானது.

ஒரு பெட்டி விலை ரூ 5—0—0

'ஆத்ரேய'

ஆயுர் வேதிக் ஒர்க்ஸ்,

தென்னூர் ரோடு, திருச்சிராப்பள்ளி

"வானிடிந்து வீழுகின்ற போதிலும்" பிரிட்டன் தளரப்போவதில்லை

மனிதவர்க்கத்தின் சுதந்தரத்துக்காக தர்ம யுத்தம்

[லண்டன் ரேடியோவில் மிஸ்டர் விக்கம் ஸ்டீட் பேசிய வார்த்தைகள்]

இந்த யுத்தம் தேசிய கௌரவத்துக்காக நடக்கும் போரல்ல. இது ஏகாதிபத்ய போரும் அல்ல. முதலாளித்துவ போர் என்று இதைச்சொல்லவேமுடியாது. இது உலக மக்களுக்குள் நடக்கும் உள்நாட்டு யுத்தம். மக்கள் சுதந்திரமாக வாழ உரிமை யுண்டு என்பதற்காக நடக்கும் யுத்தம் இது ஜெர்மனியிலும் போலந்திலும் செக்கோஸ்லவேகியாவிலும் டென்மார்க்கிலும், நார்வேயிலும், ஹாலந்திலும், பெல்ஜியத்திலும், ஒரு வேளை பிரான் ஸிலுங்கூட— ஹிட்லர் ஆதிக்கத்தில் ஜெர்மனியர் லட்சக்கணக்கான மக்களைப் பல வந்தப்படுத்தும் வாழ்க்கையை விரும்பாததால் மூண்ட யுத்தம்.

விடுதலை மணி எப்போது அடிக்கப்போகிறது என்று கோடிக்கணக்கான மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும்— நாம் அவர்கள் போரை நடத்துகிறோம் என்பது. நாமும் அதை அறிவோம். அமெரிக்கா கண்டத்திலே வாழுகிறார்கள் ஒரு கோடி ஜனங்களுக்கு மேலே; அவர்கள் எல்லாரும் இதயத்தில் நம்மோடு ஒன்றுபட்டவர்களே. அவர்களுக்கும் தெரியும் ஒரு விஷயம். வெற்றி ஞாயிறு உதயமாவதற்கு முன் இருள் எவ்வளவு கறுத்திருந்தபோதிலும் நாம் நம் உறுதியினின்று பிறழோம். உலகத்திற் அக்கிரமங்களை அதிகரிக்க விடமாட்டோம் என்பது. என்னதான் அபாயம் சூழ்ந்தாலும் நம்மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு நாம் துரோகம் செய்யப் போவதில்லை. எமனே எதிர்ப்பட்டாலும் அஞ்சாத விசுவாசப் பாதுகாவலராய் நாம் நிற்போம்.

இவ்வளவு நம்பிக்கை நம்மிடம் இருப்பதற்கு என்ன காரணம்? மற்ற மக்களுக்கு உதவிசெய்ய நமக்கு என்ன உரிமை? பிரிட்டிஷ் தீவின் சரித்திரமே இந்த உரிமை அளிக்கிறது. ஸ்பானியக் கப்பல் படையை தோற்கடித்ததும்நெப்போலியனை முறியடித்ததும் நாம்தான். அமெரிக்காவில் 13 மாகாணங்களை நாம் இழந்தபோதிலும் நாம் இதே போன்ற ஒரே படிப்பினையே உணர்ந்தோம். ஒவ்வொரு தனி மனிதருக்கும் தன்னுடைய கடமையைச்செய்ய உரிமையுண்டு; இந்த உரிமை புனிதமான உரிமை என்ற உண்மையான யவன தேசத்திலிருந்தும் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றிய ரோம புரியிலிருந்தும் நாம் அடைந்தோம். இந்தத் தத்துவம் மேல்நாட்டு நாகரீகம் முழுவதுக்கும் அடிப்படையான தத்துவம். இதுவே மக்கள் மேலும் மேலும் உன்னத தசையடையத் தூண்டும் மந்திரம்.

பிரிட்டிஷ் மக்களும் சாம்ராஜ்ய மக்களும் சேர்ந்து இப்போது உறுதியாய் நிற்போம், நமக்குத் தோல்வியே வராது. நாம் தோற்றல் நமக்கு தேசிய வாழ்வு பிறகு கிடையாது. அதை அடியோடு அழித்து விடுவார்கள். சாம்ராஜ்யத்தைச் சிதற அடித்தோ, அடக்கி ஒடுக்கியோ எடுத்துக் கொண்டு விடுவார்கள். அவ்வாறு நேர்ந்தால் பிறகு உலகமே இருளடைந்து போய் விடும். மனித உரிமை ஒவ்வொன்றையும் மிதித்துத் தேய்த்து விடுவார்கள். பிறகு யுக யுகமாய்க் கழித்தாலும் வழி பிறக்காது. ஆகையால் மனிதவர்க்கத்தின் உத்தாரணத்துக்காக இந்த தர்மயுத்தத்தை நடத்துவோம்.

இது தர்மயுத்தம் என்பதை இந்தியாவிலும் உணர்ந்திருக்கிறார்கள், ஹிந்துக்களும் முஸ்லீம்களும் இதர மதஸ்தர்களும் கிறிஸ்தவர்களான நமக்கு உதவி செய்ய வந்திருக்கிறார்கள். துரோகியான நாஸி ஹிட்லரையும் கோடாரிக் காம்பு போல் கிறிஸ்தவ ரோம் ஈன்ற வஞ்சக முஸலோனியையும் எதிர்க்க.

நம்முடன் சேர்ந்த மக்களுக்கும், நம்மை உதவி கோரிய மக்களுக்கும் விடுதலை கிடைக்கச் செய்வதில் பிரிட்டன் தவறப் போவதில்லை.

இருள் சூழ்ந்த நேரம் தான், பயங்கரமானஅபாயம் தான் என்றாலும் இதோ விடிந்து விடப்போகிறது! பூத பைசாசங்களைப்பொருவோம்! உலகத்தின் அழிவைத்தடுப்போம்! சுதந்தரத்திற்கு உயிர் கொடுப்போம்!

வெற்றிக்கு விதை!

இருபது லக்ஷம் ஏகராவில் புதிதாய்ப் பயிர்த்தொழில், பந்தாடும் மைதானங்கள் பயிரிடும் பண்ணைகளாகின்றன

(ஜார்ஜ் எடிங்கர்)

இன்று ப்ரிட்டிஷ் மக்கள் வெற்றிக்காகப் போர்களத்திலே மட்டும் போராடவில்லை, தங்கள் நாட்டுக்குள்ளேயே நிலத்தினிடமும் தங்கள் கைவரிசையைக் காட்டிவருகிறார்கள். யுத்தம் முற்ற முற்ற வெளி நாடுகளிலிருந்து கடல் மூலம் வரவேண்டிய உணவுப் பொருள்களை அதிகம் எதிர்பாராதிருப்பது நல்லதல்லவா? அதற்காகத்தான் இருபது லக்ஷம் ஏகரா நிலத்தை அவர்கள் புதிதாய் உழுது பயிரிட ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் வயல் வெளிகளில் மட்டுமே இந்த வேலை நடக்கவில்லை. சற்றும் எதிர்பார்க்கமுடியாத இடங்களிலெல்லாங்கூட, "நிலத்தை உழுதால் நிச்சயம் வெற்றி" என்னும் கொள்கையுடன் முயற்சி நடந்து வருகிறது.

நகர்ப் புறங்களிலெல்லாம் ஒவ்வொரு வீட்டிலுள்ள சிறுதோட்டத்திலும் உத்தியோகஸ்தர்களும் மெக்கானிக்குகளும் தங்கள் ஓய்வு நேரத்தை இப்படிப்பயன்படுத்துகிறார்கள். அருமையான புஷ்பங்கள் பூத்தநிலத்திலே உருளைக்கிழங்கை நடுகிறார்கள். டென்னிஸும், க்ரிக்கெட்டும், க்ராக் கெட்டும், கால்பும் விளையாடிய மைதானங்களிலெல்லாம் இன்று மக்களுக்கு உணவு விளைகிறது. லண்டன்நகரத்திலே கூட ஜன்னல் குழிகளிலெல்லாம் முள்ளங்கியும், க்ரெஸ்ஸும் பயிரிட்டு வருகிறார்கள் உண்மையில் லண்டனிலே தான் இந்த முயற்சி நன்றாகத்தெரிகிறது. நாடுமொத்தமும் இப்படிப்படும் பாட்டிலே லண்டனும் பங்கெடுத்துக் கொள்வதிலே ஒருவிசேஷமிருக்கிறது. இப்படிச்செய்வதால் லண்டன் தன் பழைய சரித்திரத்துக்கே புத்துயிர் கொடுக்கிறதெனலாம்.

எட்டு நூற்றாண்டுகளாக லண்டன் மக்களின் வாழ்க்கையிலே காய்கறித்தோட்டம் ஒரு முக்கிய அம்சமாயிருந்து வந்தது. கடைசியாக அந்தத்தோட்டக்கால்களிலெல்லாம் மக்கள் கட்டடங்களிலெல்லாம் விளையாட்டுமைதானங்கள் அமைத்தும் அவைகளை ஒழித்துவிட்டது. இன்றும் நம்மில் பலருக்கு ஞாபகத்திலிருக்கிறது.

சிறிது காலத்துக்கு முன்னே பிள்ளைகள் விளையாடுவதற்காக விட்டுவிட்ட இடங்களிலெல்லாம் இன்று பெரியவர்கள் வேலை செய்வதை, நகரத்துக்குள்ளேயும் அதைச் சுற்றியும் பச்சைப்பசேலென்று செடிகளும் கொடிகளும் தழைத்து நிற்பதை; புதிதாய் எவராவது வந்து பார்த்தால் அவருக்கு மனத்துயரந்தான் உண்டாகும் நிம்மதியாய் அமைதியாய் இருந்து வந்த லண்டன் இன்று யுத்தச்சுழலில் அகப்பட்டுச் சங்கடப்படுகிறதென்பதை இந்தகாட்சி தெளிவாய் எடுத்துக் காட்டுகிறதல்லவா?

(Bureau of Public Information,)
Government of India,

தக்கர்கள்-கொலைபுரிவதே அவர்கள் தர்மமா?

ஸ்ரீ பாட்னகரின் ஆராய்ச்சி.

முகலாய அரசாட்சி சிதைந்து ஆங்கில ஆதிக்யம் தலைப்படுவதர்க்கு நடுவேஉள்ள காலமான 1830 முதல் 1835 வரையில், இந்தியா முழுவதும், கொள்ளை அடிப்பதையும் கொலைபுரிவதையுமே தங்கள் தொழிலாகக்கொண்ட தக்கர்கள் என்னும் கூட்டத்தாரின் வசப்பட்டு நடு நடுங்கிக் கொண்டிருந்ததாகவும் கம்பனி உத்யோகஸ்தர்களே ஓர் இயக்கத்தை ஆரம்பித்து அவர்களை நசுக்கினதாகவும் நாம் இதுகாறும் கொண்டிருந்த அபிப்ராயம் ஆதாரமற்றது என்று இப்பொழுது செவ்வனே புலப்பட்டு விட்டது. இந்திய ஹிஸ்டாரிகல் கமிஷன் ஷை விஷயத்தை தீர விசாரித்து ஆபீஸ் ரிகார்ட்களையும் பரிசீலனை செய்து பார்த்ததில், 1830 முதல் 1835 வருஷம் வரையில் இந்தியாவில் ஏராளமாக தீவட்டிக் கொள்ளைகள் நடந்திருப்பது வாஸ்தவம்தான் என்றும், ஆனால் அப்படி கொள்ளை அடித்துக் கொண்டிருந்தவர்கள் கொலை செய்வதையே தங்கள் தர்மம் என்று கொண்ட யாதொரு மதஸ்தாபன அங்கத்தினர்கள் அல்லவென்றும், அடுத்தடுத்து உண்டான உள்நாட்டு யுத்தங்களால் அஸ்திரபயிற்சி ஏற்பட்டு பிறகு வேலை கிடைக்காமல் திண்டாடிய சிப்பாய்கள் தற்போதிய வரிவசூல் ந்யாயவிசாரணை முதலிய திட்டங்களின் ஊழல்களை கண்டு தாங்களே தீவட்டிக் கொள்ளை அடித்து உண்ண ஆரம்பித்தனர் என்றும் இந்த பயத்தை வேணுமென்றெ அதிகமாக காட்டி கிழக்கிந்திய கம்பெனி சிப்பந்திகள் கொடுத்த விபரங்களைக் கொண்டே நாம் இது வரையில் தக்கர்கள் என்னும் கொலைகார கூட்டத்தினர் இந்தியாவை சூரையாடினதாக நம்பி வந்திருக்கிறோம் என்று வ்யக்தமாகிறது.

ஸ்ரீ வியாஸ ராஜ மடத்து ஸ்ரீ ஸ்வாமிகளுடன் பேட்டி

மதுரையில் பிரசுரமாகும் "இந்தியத் தாய்" பத்திரிகை ஆசிரியரான ஸ்ரீமான் ஆனந்தராவ், ஸோஸலே ஸ்ரீ வியாஸ ராஜ மடத்து ஸ்ரீ ஸ்வாமிகளிடம் ஆலயப்ரவேச சட்ட விஷயமாகப் பேட்டிகண்டு பேசினர்.

ஸ்ரீ ஸ்வாமிகள் மேற்படி சட்டத்தை பலமாகக் கண்டிதத்துடன், கணக்கற்ற ஸனாதநிகளின் ஆக்ஷேபத்தையும் பொருட்படுத்தாமல் ஆங்கில கவர்ன்மெண்டார் அச்சட்டத்திற்கு ஆதரவளித்ததைப்பற்றி வருத்தப்பட்டார்கள்.

தீண்டாதார் க்ஷேமமடைய அநேக நல்வழிகளிருப்பதாயும் ஆனால் ஆலயபிரவேசம் அதற்கு ஏற்றதல்ல வென்றும் அதனால் அந்த ஜாதியாருக்குத் தீங்கு தான் உண்டாகுமென்றும் கூறினார்கள்.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம்.

பரமந்தூர்

19—6—40 அன்று கூட்டத்திற்கு ஸ்ரீமான் K. S. சுந்தரேச அய்யரவர்கள் தலைமை வகித்தார்.

P. V. ஸ்ரீநிவாஸபட்டாசாரியார் அவர்கள் கடவுள் வணக்கத்தின் பிறகு மீட்டிங் ஆரம்பமாயிற்று.

நாளது தேதி வரை சங்க மெம்பர்கள் பதிவாகவுள்ளவர்கள்:—

பி. வி. ஸ்ரீநிவாஸபட்டாசாரியார், எஸ். கோபால அய்யங்கார், ரு. ஸத்யமூர்த்தி அய்யங்கார், க. மு. ஆறுமுகத்தேவர், கே. எஸ். சுந்தரேச அய்யர், டி. கெ. சுப்பிரமண்ய அய்யர், எஸ். வெங்கிட்டராம அய்யர், டி. சுந்திரராஜ அய்யங்கார், கே. மாணிக்கம்பிள்ளை, எஸ். இராமசாமி பிள்ளை ஆ. மு. ஆவடையப்பத்தேவர்.

இந்தச் சங்கத்திற்கு தலைவராக கே. எஸ் சுந்திரேச அய்யர், அவர்களை தேர்ந்து எடுக்கப்பட்டது.

காரியதரிசியாக பி. வி. ஸ்ரீநிவாஸபட்டாசாரியாரையும். உபகார்யதரிசியாக டி. கே. சுப்பிரமண்ய அய்யரையும், பொக்கிஷதாராக டி. சுந்திரராஜ அய்யங்காரையும், இந்த விதமாய் இருந்து வருவதற்கு எஸ். கோபால அய்யங்கார் பிரேரேபணையின் பேரில் எஸ். வெங்கிட்டராம அய்யர், ஸத்தியமூர்த்தி அய்யங்கார் இவர்களால் ஆமோதிக்கப்பட்டும் மற்றுமுள்ள மெம்பர்களும் ஆமோதித்ததின் பேரில் நிறைவேற்றப்பட்டது.

சங்க ஸம்பந்தமான எந்த விதமான நடவடிக்கைகளும் நடத்த காரியதரிசி அவர்களுக்கு பூர்ண அதிகாரமுண்டு.

சங்க ஸம்பந்தமான நாளது தேதி வரையுள்ள வரவு சிலவு கண்க்குகளையும் கவனிக்கப்பெற்றது.

இந்த சங்கத்திற்கு சுதேசமித்திரன் தினசரிப் பத்திரிக்கை வரவழிக்கவேணுமென்றும் அதற்கு தற்போது ஒரு மாத சந்தா கட்டி வரவழைக்கிறதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இச்சங்கம் அமைந்து இருக்கும் இடம் சிறுகிராமமாய் இருப்பதாலும் இவிடத்து ஜனங்களுக்கு வர்ணாஸ்ரம தர்மத்தின் தற்கால நிலமை சரிவரத் தெரியாமல் இருப்பதாலும், காங்கிரஸ் மந்திரிகளால் சீர்கேடு அமைந்து இருக்கும் ஸநாதன தர்மத்திற்கு புத்துயிர் அளித்து காப்பதற்காக பாடு பட்டு வரும் அகில இந்திய வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்க கார்ய அத்யக்ஷகர் ஸ்ரீமான் ராவ் சாகேப் என். நடேசய்யர் அவர்களையும் அவர்கள் கோஷ்டியாரையும் இவ்விடத்திற்கு அழைத்து அவர்களைக் கொண்டு உபன்யாஸங்கள் செய்விக்கவேணுமாய் பிரார்த்தித்தும் அவ்விதம் அவர்களை வரவழைப்பதை பக்கத்தில் இருக்கும் ஆவிடையார் கோவில் ஸ்ரீமாணிக்கவாசகர் ஏழாம் திருநாள் உத்ஸவதை ஒட்டி வரவழைக்கவேணுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வில்லிவாக்கத்தில் 27—5—40 தேதி நடந்த ஸ்ரீதாமோதரப் பெருமாள் பிரும்மோத்ஸவத்தில் அவ்வூர் பஞ்சமர்கள் செய்த அட்டஹாஸத்தை அதிதீரத்துடன் எதிர்த்து சாஸ்திர விரோதமாயும் வழக்க விரோதமாகவும், செய்ய முடியாதென்று உறுதியாய் நடந்து கொண்ட ராமகிருஷ்ண பட்டாசாரியார் அவர்களையும் அவ்வூர் பட்டரும் பிரபல ஸநாதனியுமான கிருஷ்ண பட்டாசாரியாரவர்களையும் அந்த ஸன்னதி தர்மகர்த்தாவான ஸ்ரீ மான்நாராயண ரெட்டியார் பிள்ளை அவர்களும் மற்றும் அந்த கிராமத்தார்களும் இது விஷயத்தில் ஒத்துழைத்து ஸநாதன தர்மத்தை காப்பாற்றியதற்காக அவர்களை வெகுவாக கொண்டாடுவதாக ரு. ஸத்யமூர்த்தி அய்யங்கார் எஸ். வெங்கிட்டராம அய்யர் அவர்கள் பிரேரேபிக்கப்பட்டு மற்றுமுள்ள மெம்பர்கள் ஆதரவின் பேரில் ஷை தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது,

இச்சங்கத்திற்கு ஸ்ரீமான் கண்டமங்கலம் சுப்பிரம்மண்ய அய்யர்வரகளால் எழுதப்பெற்ற ஆலயப்பிரவேசம் என்ற ஒரு ஸம்பாஷணை புஸ்தகம் 0—6—0 விலையுள்ளதை வாங்கிவைக்கவேணுமென்று சுப்பிரமண்யய்யரால் பிரேரேபிக்கப்பட்டு டி. சுந்திரராஜ அய்யங்கார் பி. வி. ஸ்ரீநிவாஸபட்டாசாரியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

தலைவர் தனது முன்னுரையில் காங்கிரஸ் மந்திரிகள் ஸநாதன தர்ம ஸம்பந்தமாய் செய்து இருக்கும் அட்டூழியங்களை சுருக்கமாய் எடுத்துச் சொல்லி ஷை காங்கிரஸ் காரர்களாய் இருப்பவர்கள் ஸநாதன தர்மத்திற்கு கேடு வருவதை உத்தேசித்து ஷை காங்கிரஸைவிட்டு விலகி ஸநாதன தர்ம ஸங்கத்தில் சேர வேணுமென்றும் இன்று கூட்டத்திற்கு வந்திருக்கும் ஒவ்வொருவருஷம் இது விஷயத்தில் ரொம்பவும் சிரத்தை எடுத்து பாடுபட வேண்டுமென்றும் சொல்லி முடித்தார்.

கடைசியாக கார்யதரிசி பி. வி. ஸ்ரீநிவாஸ பட்டாசாரியார் அவர்களால் தலைவருக்கு வந்தனோபசாரம் செய்யப்பட்டு ஸத்யமூர்த்தி அய்யங்கார் அவர்களால் மங்கள ஸ்லோகம் பாடப் பெற்று கூட்டம் இனிது முடிந்தது.

அதன்பேரில் கூட்டத்திற்கு வந்திருந்த பேர்கள் எல்லோருமாகச் சேர்ந்து ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள், ஸ்ரீ பரிமளவல்லித்தாயார் ஸன்னதிகளுக்கு சென்று தற்போது நடக்கும் 'யுத்தத்தில் பிரிட்டிஷாருக்கு வெற்றி கிடைக்க வேணுமாயும், ஸநாதன தர்மம் நீடூழிகாலம் வாழ வேணுமாயும், பிராத்தனைகள் செய்யப்பட்டது.

பி.வி. ஸ்ரீநிவாஸபட்டாசார்
கார்யதர்சி

தார்மிகயுவ சங்கம் என்ற தர்ம ஸம்ரக்ஷண வாலிபர் சங்கம்.

இராமேஸ்வரம்.

இரண்டாவது ஏகாதசி விழாவில் சங்கரசரிதம்

1940ஸு ஜூன்-மீ 16உ மாலை 6–30 மணிக்கு இவ்வூர் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத் தலைவர் பிர்ம்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்கள் அக்கிராஸனத்தில் மேற்படி விழா சங்கக் கட்டிடத்தில் நடை பெற்றது.

மேற்படி விழா ஆரம்பத்தில் பிர்ம்மஸ்ரீ ஹரிதாஸ் ஸ்ரீநிவாச பாகவதரவர்களால் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசாரியாள் பேரில் இயற்றப்பட்ட குரு கீர்த்தனையும் வாழ்த்து கீதங்களும், சங்கக் கரியதரிசி கோடிலிங்கம் சங்கர சாஸ்திரிகளாலும் ராமச்சந்திர சர்மாவினாலும் அழகாக பாடப்பட்டது.

அக்கிராஸனர் தமது முன்னுரை பிரஸங்கத்தில் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி அவர்களின் ஆக்ஞையின்படி நடந்து வருகிற இந்த விழாவிற்கு நான் அக்கிராஸனம் வகிக்கும்படியாயுள்ள பாக்கியம் கிடைத்ததை தம்முடைய பூர்வ ஜன்ம புண்ணியமென்றும், நம் ஸநாதன தர்மமானது, தற்காலத்திய காங்கிரஸ் சபையினுள் ள மெஜாரிட்டி பலத்தினால் மாகாணங்களிலுள்ள சட்டஸபைகளைக் கைப்பற்றிக் கொண்டு மதவிஷயத்தில் அதிக்ரமமாக பிரவேசித்து சட்டம் செய்திருப்பதானதும், மிகவும் தவறுதலானதென்று சரித்திர பூர்வமாகவுள்ள ஆதாரங்களைக்கூறுகிறோம் (அதாவது) சித்திரகூடாசிரமத்தில் ராமன் பரதனைப்பார்த்துச்சொல்லும் படிப்பில்லாத ஆயிரம் பேர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு ராஜீய நீதி நடத்துகிறாயா அல்லது படிப்பில் வித்வானாகவுள்ள தனி ஒரு மனிதனின் வார்த்தையைக் கேட்டு ராஜ்ய நீதி நடத்திகிறாயா என்று சொன்னதிலிருந்து மதவிஷயங்களிலும் வேத சாஸ்திர மறிந்த வித்வான்களுடைய அபிப்பிராயமே மேலானதென்று ஏற்படுகிறதல்லவா? அப்படியிருக்க இந்த மதபிரவேசச் செய்கையானது எவ்வளவு ஒழுங்கற்றதென்றும் படிப்பில்லாத்தனமென்றும் நிதர்சனமாய் தெரிகிறது. அதற்கு இப்படியாகவுள்ள அதிக்கிரமச் செய்கைகளை தடுப்பதற்கு நம்மிடம் ஒற்றுமை அதிகம் வேண்டுமென்றும் (குறிப்பாக) வாலிபர்கள் தான் ஒன்றுபட்டு இப்படிப்பட்ட ஸ்தாபனத்திற்கு தகுந்த புத்தி கற்பிக்கலாமென்றும், தம்மை போலொர்த்த வயோதிகர்களால் இனிமேல் ஒன்று செய்ய மார்க்கமில்லை என்றும் வாலிபர்கள் தான் மத தர்மம், ஆலய பாதுகாப்பு இவைகளை காப்பாற்ற முன்வந்து ஈடுபட வேண்டுமென்றும் கூறிவிட்டு அடுத்தப்படியாக சங்கம் ஆலோசனையாளர் பி. மஹாதேவ சாஸ்திரிகளவர்கள் சங்கர சரிதம் என்ற புண்ணிய சரித்திரத்தை உபன்யஸிப்பார்கள் என்றும் கூறி தமது பிரசங்கத்தை முடித்து கொண்டார். அதன்படி பி. மஹாதேவ சாஸ்திரியவர்கள் ஸ்ரீ சங்கர சரித்திரத்தை, உருக்கமாக பொது ஜனங்களின் மனதில் பதியும்படி 2-மணி நேரம் வரை உபன்னியாஸம் செய்தார்.

பிர்ம்மஸ்ரீ நீ. நா. இராமநாத சாஸ்திரிகளும் சங்கத்தலைவர் மு. வ. கோபால சாஸ்திரிகளும் வாலிபர்களும் அவர்கள் கடமையும், என்பது பற்றி ஒரு மணி நேரம் வரை உருக்கமாக பேசினார்கள். முடிவில் தேவதா படங்களுக்கு தீபாராதனை முதலியது நடந்தது. அக்கிராஸனர் அவர்களுக்கும் பிரஸங்கம் செய்த தலைவர்களுக்கும் எஸ். சுந்தராமய்யர் அவர்களால் மாலைகள் சூட்டப்பட்டு வந்தனோபசாரம் கூறியும் விழா இனிது முடிந்தது.

கோடிலிங்கம் சங்கரசாஸ்திரிகள்.
காரியதரிசி

ஆஸாத்—சிக்கந்தர் பேட்டி

காங்கிரஸ் தலைவர் மௌலானா ஆஸாதும், பஞ்சாப் பிரதமமந்திரி ஸர் சிக்கந்தர் ஹயத்கானும் தற்கால நிலைமையைப் பற்றியும், ஹிந்து முஸ்லீம் வகுப்பு ஒற்றுமை விஷயமாயும் நீண்டநேரம் கலந்து பேசினர். வகுப்பு ஒற்றுமை விஷயமாக கூடிய சீக்கிரம் தலைவர்களின் மஹாநாடு ஒன்று கூட்டப்படுமென்று சொல்லப்படுகிறது.

வி. பி. ஸுப்பய்யா கைதி

தமிழ்நாடு காங்கிரஸ் கார்யதரிசியாயிருந்த ஸ்ரீமான் வி. பி. ஸுப்பய்யா எம்.எல்.ஏ. என்பவர் யுத்தகால அவஸரச்சட்டம் பிரகாரம் கோயமுத்தூரில் கைது செய்யப்பட்டார். இவர் ஜாமீனில் விடப்பட்டிருக்கிறார்.

தார்மிகயுவர் சங்கம்
மதுரை

இச்சங்கமானது இப்பொழுது வெகு மும்மரமாக வேலை செய்து வருகிறது, எதற்காகவென்றால் வருகிற தேருதல்களில் நம் வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தார் அவர்களுக்கே தேர்தல் ஸ்தாபனங்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கம் தான். ஹிம்ஸையையும், அஸத்யத்தையும் நடத்தி வருகிறவர்கள், இனிமேல் பாமரமக்களை ஏமாற்றி ஓட் உரிமை பெற முடியாமலிருப்பதற்காக மதுரையிலுள்ள ஒவ்வொரு தெருக்களிலும் தினந்தோறும் கூட்டம் போட்டு உண்மையை எடுத்து விளக்கி வருகிறது. அச்சங்கத்தில் 10 வயது முதல் 18 வயது வரையிலுள்ள சிறு குழந்தைகள்கூட அங்கத்தினர்களாக இருந்து இம்மாதிரி தர்மபிரசாரம் செய்துவருவது மிகவும் மெச்சத் தக்கது. ஆகையால் ஆஸ்திக மஹாஜனங்கள் ஒவ்வொரு ஊரிலும் ஓர் தார்மிக யுவச் சங்கத்தை ஏற்படுத்த வேணுமாய் கேட்டுக் கொள்வதுடன் இதுவரை 4 தெருக்களில் கூட்டம் நடந்தாய்விட்டது என்பதை பற்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடந்தை
டவுன்ஹைஸ்கூலில் ஓர் பிரிவு உபசாரம்

சென்ற 21—6—'40 வெள்ளிக்கிழமையன்று டவுன் ஹைஸ்கூல் தலைமை சரித்திர ஆசிரியரான ஸ்ரீமான் எஸ். ஸாரங்கபாணி அய்யங்கார் அவர்கள் தம் பதவியிலிருந்து ரிடையரானார். அவ்வமயம் டவுன் ஹைஸ்கூல் ஆருவதுபாரம், 'டி' டிவிஷன் மாணாக்கர்கள் அவருக்கு பிரிவு உபசாரம் நடத்திக் கொடுத்தனர். ஸ்ரீ பி. ஆர். ஸுப்ரவண்யம் என்னும் மாணவனால் அவருக்கு மாலையிடபட்டு, ஸ்ரீ ஆர். நரஸிம்மாசாரியாரால் ஆங்கிலத்தில் பிரிவு உபசாரம் வாசித்துக்கொடுக் கொடுக்கப்பட்டது. பிறகு ஆசிரியரும் தம் மாணாக்கர்களுக்கு பல அரிய புத்திமதிகளை கூறினார். இவ்விஷயத்தில் ஈடுபட்ட ஸ்ரீ. ஜி. கேசவன், ஸ்ரீ ஆர். விஸ்வநாதன் என்னும் மாணவர்களின் முயற்சி பாராட்டத் தகுந்தது. ஆங்கு கூடியிருந்த மாணவர்களுக்கு கற்கண்டு முதலியவை வழங்கப்பட்டன.

மேலும் டவுன் ஹைஸ்கூல் "உபாத்யாயர்களின் சங்கத்"தின் சார்பாகவும் ஓர் உபசரிப்பு நடத்தப்பட்டது. பகல் 1 மணிக்கு தேனீர் விருந்தும் மாலையில் புகைப்படமும் பிடிக்கப்பட்டது. தலைமை உபாத்யாயரான ஸ்ரீமான் ஆர் சடகோபாசாரியாரின் தலைமையில்நடந்த கூட்டத்தில் காரியதரிசியான ஸ்ரீமான் எம். ராமராவ் அவர்களால் உபசாரப்பத்திரம் வாசிக்கப்பட்டு ஒரு வெள்ளிக்கோப்பையும் பரிசளிக்கப் பட்டது. ஸ்ரீமான்கள் கே. எஸ். ராமச்சந்திர அய்யர், ஊ. சா. வேங்கடராமய்யர், ஜி. ரெங்காச்சாரியார், ஜி. வி. ராமய்யர், கே. ராகவய்யங்கார், ஹெட்மாஸ்டர் முதலியவர்கள் ஸ்ரீ ஐய்யங்காரின் பொறுமை முதலிய குணங்களைப் புகழ்ந்துபேசினார்கள். அவைகளுக்கு ஸ்ரீமான் சாரங்கபாணி அய்யங்கார் தகுந்த பதிலளித்தார். முடிவில் காரியதரிசியால் அனைவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது. ந. கி.

உ

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ மடம் சிஷ்யகோடிகளுக்குக் கொடுத்த

ஆக்ஞா ஸ்ரீமுகம் பிரகாரம்:

திருவாரூர்

ஸ்ரீ தியாகராஜப்பெருமானுக்கும்

ஸ்ரீவல்மிகநாதர் முதல் பஞ்சமூர்த்திகளுக்கும்

136 குடம் கங்காதீர்த்தம் பிரயாகையிலிருந்து தருவித்து மஹாஅபிஷேகத்தை நாளது விக்ரம௵ ஆனி௴ 22௳ (5—7—40) முதல் ஆனி௴ 32௳ தேதி (15—7—40) ஸோமவாரம் முடிய, 136 வைதீகர்களைகொண்டு ஸ்ரீமஹா ருத்ர பாராயணம் செய்வித்து தக்ஷிணாயனபுண்யகாலம் ஸமயம் அபிஷேகம் செய்விப்பதென்றும் இந்த 12 நாளிலும் அன்னதானம் செய்வதென்றும் தீர்மானித்திருப்பதாலும், இந்த கைங்கர்யமானது மஹாஜனங்களின் க்ஷேமத்தையும் துர்பிக்ஷம் நீங்கவும், ராஜாங்க க்ஷேமத்தையும் உத்தேசித்து நடத்தப்படுகிறது. இந்தவிதமான கைங்கர்யம் இதற்கு முன் ஒருபோதும் நடந்ததாகக்காணப்படவில்லை. ஒருசமயம் இராஜாக்களால் நடத்திவைக்கப்பட்டிருக்கலாமோ தெரியவில்லை இதற்கு ஏராளமான பொருள் தேவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே தர்மம் என்பது கேட்டும், கேளாமல்தானாகவே செய்ய முன்வருவதே சுத்தமான தர்மமென்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஜெகத்தில் தர்மிஷ்டர்கள் ஏராளம் ஒவ்வொருவரையும் அணுகி நேரில் போய் தெரிவித்து கேட்பதென்பது சிரமமான கார்யம் ஆகையால் கேளாமல் செய்வதே உத்தமம் மென்பதைஅனுஸரித்து தங்களால் இயன்றதை பணமாகவோ அன்னதானததுக்குரியஸ மக்கிரியைகளாகவோ அடியில்கண்ட விலாசத்துக்கு நேரிலோ மனுவியார் மணிஆர்டர் மூலமாகவோ அனுப்பியும் கூட இருந்து இந்த தர்மதை நடத்திவைத்து கிருதார்த்தர்களாகவும் இசுவர அனுக்றஹத்தை அடையவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விலாஸம்

பழனிசிவன்,

9நெ. ஸன்னதித் தெரு திருவாரூர். S.I.R

பெரம்பூர்
சம்ஸ்கிருத உபன்யாஸம்

ராஜமன்னார்குடிக்கு அடுத்தாற்போல் உள்ள பெரம்பூரில்(18-6-40) ஓர் உபன்னியாஸம் நடைபெற்றது. அவ்வமயம் சிதம்பரம் ஏ. வி. சௌரிராஜன். சம்ஸ்கிருத கல்வி பயில வேண்டு மென்றும் போதிக்கும் உபாத்தியாயர்கள் சம்ஸ்கிருதத்தில் உண்டாகும் நன்மையை பையன்களுக்கு எடுத்துரைக்க வேண்டு மென்றும் சம்ஸ்கிருத பாஷையை பேசும் பாஷையாக ஆக்க வேண்டியது ஒவ்வொரு சம்ஸ்கிருதாபிமானி கடமை என்று சம்ஸ்கிருதத்திலேயே வெகு திறமையாக எடுத்துரைத்தார். உபன்னியாஸத்திற்கு அனேக ஆஸ்திகர்கள் விஜயம் செய்தனர்

வைகானஸமதத்தின் பெருமை

பெரம்பூரில் (17-6-40) ஓர் உபன்னியாஸம் நடைபெற்றது. அவ்வமயம் நாச்சியார் கோவில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாச பட்டாசார் உபன்னியஸிக்கையில் வைகானஸமதத்தின் பெருமையையும் அந்தமதம் வேதாதிகளில் தெளிவுபடுத்த பட்டிருக்கென்றும் அம்மதநெறி தவறாமல் வைகானஸர்கள் நடக்கவேண்டு மென்றும் எடுத்துரைத்தார்கள். பிறகு உபன்னியாஸகருக்கு ஏ. வி சௌரிராஜன் அவர்களால் அபிநந்தன வார்த்தைகள் கூறப்பட்டது வைகானஸர்கள் அனேகர் விஜயம் செய்தனர்.

சனாதன தர்ம பிரசாரம்

கீழ சன்னிதியில் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் ஆதரவில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம், ஸ்ரீமான், நல்லான் சக்ரவர்த்தி பார்த்தஸாரதி அய்யங்காரவர்கள் தலைமை வஹித்து பேசுகையில் ஸனாதன தர்ம மஹிமையை எடுத்துரைத்தார்கள். சிதம்பரம் தாலூக்கா ஸனாதன தர்ம பிரசாரகரான விஜயராகவாச்சாரியார், திருவெண்காடு முத்து சாஸ்திரிகள் முதலியோர்கள் சொற்பொழிவாற்றினார்கள். வெங்கடசுப்பிரமணிய தீக்ஷிதர் அவர்களால் வந்தனோபசாரம் கூற கூட்டம் இரவு 8 மணிக்கு முடிவுபெற்றது.

கிறிஸ்தவ மத குருவுக்கு ஸ்ரீ நடேசய்யர் தந்தி

அகில இந்திய வர்ணாச்ரம ஸவராஜ்ய சங்கத்தின் தலைவரான மதுரை ராவ்சாகேப் நடேசய்யர் கீழ்கண்ட தந்தியை இங்கிலாந்தின் மத குருவுக்கு அனுப்பிஇருக்கிறார்.

"லக்ஷக்கணக்கான ஸனாதனி ஹிந்துக்கள் உலக யுத்தத்துக்கு காரணம். காங்கிரஸ் வெகு நாளைய ஆங்கில மத நடுநிலைமையை மீறினதால் தான் என்று நினைக்கிறார்கள். கோவில்கள் அசுத்தப்படுத்தப்பட்டது மிகவும் கொடுங்கோன்மையானதாகும். ஸனாதனிகள் தங்களை மேன்மை தங்கிய மன்னர் பிரானிடம் நிலைமையை தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டு கோவில்களை பழய நிலைக்கு கொண்டுவரும்படி வேண்டிக் கொள்கிறார்கள். ஸனாதனிகள் நேச தேச கட்சியினர் யுத்தத்தில் அதிசீக்கிரத்தில் வெற்றியுறும்படி பிராத்திக்கிறார்கள்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.